REGD. NO. M. 6311 ★ தனி இதழ் 0—1—0 ★ இலங்கையில் 10 சதம் ★ PHONE: 55630

நம் நாடு

தி.மு.க.தின இதழ் ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்

The "Nam Nadu" A Tamil Daily. ★ The Official Organ Of The D.P.F.

தி. மு. க. பெற்றுள்ள வெற்றி

(14—3—57 நண்பகல்வரை)

★

சட்டசபை:	மக்கள் சபை:
7	1

(பெற்றுள்ள மொத்த வாக்குகள்)

சட்டசபை:	மக்கள் சபை:
10,49,208	3,03,275

மலர் 4] சென்னை: பங்குனி 1௳ வியாழன் (14—3—57) ★ ★ வெளியூர்: பங்குனி 2௳ வெள்ளி (15—3—57) [இதழ் 236

அரியலூர் அளகேசன் மண் கவ்வினர்

மற்ருெரு மந்திரி மரகதத்திற்கும் அதே கதி

தி. மு. கழக ஆதரவு பெற்ற டாக்டர் கிருஷ்ணசாமி, சிவராஜ் வெற்றி

'அரியலூர் அளகேசரே! ஆண்டது போதாதா? மக்கள் மாண்டது போதாதா?' —என்று தி. மு. க. எழுப்பிய கேள்விக்கு விடை கிடைத்துள்ளது.

உதவி இரயில்வே மந்திரி அரியலூர் அளகேசனர், செங்கற்பட்டு மக்கள் சபைத் தொகுதித் தேர்தலில் மண் கவ்வினர்.

அவரோடு சேர்ந்து, 'ரிசர்வ்' தொகுதிக்குப் போட்டியிட்ட உதவி சுகாதார மந்திரி திருமதி மரகதம் சந்திரசேகரனுக்கும் அதே கதிதான் ஏற்பட்டிருக்கிறது.

இவர்கள் இருவரையும், திராவிட முன்னேற்றக் கழக ஆதரவு பெற்ற அபேட்சகர்களான டாக்டர் ஏ. கிருஷ்ணசாமி அவர்களும், தாழ்த்தப் பட்டோரின் தனிப் பெரும் தலைவர் என். சிவராஜ் அவர்களும் தோற்கடித்திருக்கின்றனர்.

அரியலூர் அளகேசனருக்கு, அவரது துடுக்குத்தனம்—வாயாடிப் போக்கிற்கு செங்கற்பட்டு தொகுதி மக்கள் நல்ல பாடம் கற்பித்திருக்கின்றனர்—தி. மு. க. ஆதரவு பெற்ற அபேட்சகர்களுக்கு மகத்தான வெற்றி தேடித் தந்திருப்பதின் மூலம்!

வாக்கு விபரங்கள்:

(பொதுத் தொகுதி)

டாக்டர் ஏ. கிருஷ்ணசாமி	...	1,88,481
ஓ. வி. அளகேசன்	...	1,86,753
ஆர். இராஜாராம்	...	25,347

(தனித் தொகுதி)

என். சிவராஜ்	...	1,53,741
மரகதம் சந்திரசேகரன்	...	1,48,675
செல்லாதவை	...	25,743

உழைத்து வாழ விரும்பாத அகதிகள்

பாகிஸ்தானிலிருந்து ஓடி வருவோரின் அட்டகாசம்

தரப்படும் வேலை பிடிக்கவில்லையெனப் புகார்

பாட்னு, மார்ச் 14—

கிழக்கு பாகிஸ்தானிலிருந்து ஓடிவருபவர்கள், 'அகதி'கள் என்று பெயர் சூட்டப்பட்டிருந்தாலும், அவர்கள் அகதிகளைப்போல நடந்து கொள்வதாகக் காணும்.

தங்களுக்குத் தரப்படும் உணவு ஏற்பாடுகள் சிறந்ததாயில்லை என்றும், தங்களுக்குப் பிடித்தமான வேலைகள் தரப்படுவதில்லை என்றும் அவர்கள் புகார் கூறுகின்றனராம்.

பீகார் சர்க்கார் தங்களைச் சரிவரக் கவனிக்கவில்லை என்று கூறி சுமார் 5,000 அகதிகள் அங்கிருந்து வெளியேறி வங்கத்திற்குச் செல்கின்றனராம்.

தாங்கள் வங்கத்தின் பிள்ளைகள் என்றும், எனவே தாங்கள் பீகாரில், மொழி—கலாச்சாரம்—உணவுப் பழக்கங்கள் இவற்றல் வேறுபட்ட பீகாரிகளுடன் சேர்ந்து வாழ விரும்பவில்லை என்றும், தங்கள் வெளியேற்றத்திற்கு சில அதிகாரிகள் காரணம் என்று கூறுகின்றனராம்.

இரயில் நிறுத்தம்

பீகாரைவிட்டு வெளியேறும் இந்த அகதிகள் பெட்டையா இரயில்வே நிலையத்தில் குழுமியுள்ளனர் என்றும், இந்த அகதிகளின் தொண்டர்கள் இரயில் வந்து நின்றதும், எல்லா அகதிகளும் வண்டியில் ஏறும்வரை இரயில்களை நகரவிடுவதில்லை என்றும், மீறி இரயில்கள் புறப்பட்டால் அவற்றை நிறுத்திவிடுவதாகவும் கூறப்படுகிறது.

பீகாரில் இவர்கள் உழைத்து வாழ்வதற்காக சர்க்கார் சுமார் 10 ஆயிரம் ஏகரா கொண்ட காலனி ஒன்று அமைத்துத் தந்தும் அங்கு வேலை செய்து வாழ இவர்கள் விரும்பாததாலேயே பீகாரைவிட்டு வெளியேறுவதாகவும் கூறப்படுகிறது.

சென்னை சட்டசபைத் தேர்தல்

கட்சிகள் நிலவரம்

சென்னை, மார்ச் 14—

சென்னை சட்டசபைக்கு இதுவரையில் 154 இடங்களுக்குமுடிவுகள் அறிவிக்கப்பட்டிருக்கிறது. கட்சி நிலவரங்கள் வருமாறு:—

தி. மு. கழகம்	7
பி. சோ.	2
சோஷலிஸ்டு	1
சுயேச்சை	12
கம்யூனிஸ்டு	2
பார்வர்டு பிளாக்	2
கா. சீ. க.	12
காங்கிரஸ்	116

சர்க்கார் ஊழியர்களுக்கு யோகம் அடிக்கிறது?

குறைந்தபட்ச ஊதியம் ரூ. 75 ஆக உயருமாம்

புதுடில்லி, மார்ச் 13—

இரண்டாம் திட்ட முடிவுக்குள் ஒவ்வொரு மாநில சர்க்கார் ஊழியருக்கும் குறைந்தபட்ச சம்பளம் ரூ. 75 ஆக உயர்ந்துவிடுமாம்!

இதற்கான திட்டத்திற்கு டெல்லி சர்க்கார் அனுமதி தந்துவிட்டார்களாம்.

இந்தத் திட்டத்திற்கு மத்திய சர்க்கார் எவ்வளவு நிதிஉதவி செய்வது என்பதைத்தான் இப்போது கணக்கிட்டுக் கொண்டிருக்கிறார்களாம்.

சர்க்கார் ஊழியர்களுக்கு 'யோகம்' அடிக்கிறது என்று இந்தத் திட்டத்திற்கு விளக்கம் தருகிறார்களாம்.

மக்கள் தீர்ப்பு

அரியலூர் இரயில் விபத்திற்கும் அளகேசனுக்கும் எந்த விதத் தொடர்பும் ஏற்படுத்திக் கூறுவது பொருந்தாது என்றும், எனவே எதிர்க் கட்சியினரின் துஷ்பிரச்சாரங்களுக்கு மக்கள் செவி சாய்க்காமல் அவரை ஆதரித்து வெற்றிபெறச் செய்யும்படியும் நேரு பண்டிதர் அவர்கள் கேட்டுக்கொண்டது நினைவிருக்கலாம்.

ஆனல் மக்கள், நேரு பண்டிதரின் வேண்டுகோளையும் ஒதுக்கி வைத்துவிட்டுத் தகுந்த தீர்ப்பளித்தது, நேரு பண்டிதருக்கேற்பட்ட தோல்வி என்று கூறுவதிலும் தவறில்லையல்லவா?

ஒப்பந்தம் ரத்தாகிறது!

அம்மான், மார்ச் 13—

1948-ம் ஆண்டு செய்துகொள்ளப்பட்ட ஆங்கிலோ - ஜோர்டான் ஒப்பந்தத்தை ரத்து செய்துவிட்டதாக ஜோர்டான் பிரதமர் அறிவித்துள்ளார்.

மத்திய சர்க்காருக்கு மேலும் ஆபத்து!

மேற்கு ஜாவாவிலும் எதிர்ப்பு

ஜகார்தா சர்க்காருக்கு இப்போது, ஜாவாவிலிருந்தே எதிர்ப்புக் கிளம்பியுள்ளதாகத் தெரிகிறது!

இந்தோனேஷிய மத்திய சர்க்காருக்கு நேற்றுவரை வெளியான தகவல்களின்படி, ஏற்கனவே ஜாவாவைத் தவிர இதர மாநிலங்களில் செல்வாக்குக் குறைந்துவிட்டது.

இந்நிலையில், 'மேற்கு ஜாவா மக்களின் அபிலாஷைகளைப் பூர்த்தி செய்ய' என்றுகூறி, 'பிரதேசக் கவுன்சில்' ஒன்று நிறுவப்பட்டிருப்பது, மத்திய சர்க்காருக்கு மேலும் ஒரு பயமுறுத்தல் என்றே கருதப்படுகிறது.

'பண்டித'ரின் கேள்வி!

சொந்தத் தொகுதியான அலகாபாத் நகர வடக்குத் தொகுதியில், வாக்களிப்பதற்கு நேரு பண்டிதர் வந்தபோது, ஓட்டுச் சாவடிக்குமுன், வாக்களிப்பதற்காக ஏராளமான மக்கள் 'கியூ' வரிசையில் நின்றுகொண்டிருந்தனர்.

வாக்குச் சாவடிக்கு வெளியே இப்படி ஏராளமான மக்கள் நின்றுகொண்டிருந்ததைப் பார்த்த நேரு பண்டிதர் வாக்குச் சாவடி அதிகாரியிடம் சென்று, 'ஏன் இவர்களை வாக்குச் செய்வதினின்றும் தடுத்து நிறுத்தி வைத்திருக்கிறீர்கள்?' என்று கேட்டாராம்!

உடனே அதிகாரி, 'வாக்குப் பதிவு செய்ய அவர்கள் வரிசையாக நின்று காத்துக்கொண்டிருக்கின்றனர்' என்று பதிலிறுத்தாராம்!

அமெரிக்கப் பொருளாதார உதவியின் மாசுபடிந்த நோக்கம் அம்பலம்

'சீட்டோ'வில் சேர்ந்தால்தான் கணிசமான உதவி என்கிருர் டல்லஸ்

'சீட்டோ' என்ற இராணுவ ஒப்பந்தத்தில் கையெழுத்திடும் நாடுகளுக்கே அமெரிக்காவின் பொருளாதார உதவி கணிசமாகவும் துரிதமாகவும் கிடைக்குமாம்.

இவ்வாறு கூறியிருக்கிறார் டல்லஸ், 'சீட்டோ' கூட்டத்தில்.

இதில் சேராத நாடுகளுக்கும் உதவி தருவார்களாம்; ஆனல் குறைந்த அளவே உதவி கிடைக்குமாம்! அதுவும் சாவதானமாக எப்போது விருப்பம் எழுமோ அப்போது தருவார்களாம்!

ரஷ்யா எச்சரிக்கை

"கான்பெர்ராவில் நடைபெறும் 'சீட்டோ' கூட்டம், ஆசிய நாடுகளின் சுதந்திரத்திறகும் உலக சமாதானத்திற்கும் பெரும் கேடுவிளைவிப்பதாகும்"

என்று மாஸ்கோ வானெலி எச்சரித்துள்ளது.

'சீட்டோ'வின் விவாத விஷயங்களில் காஷ்மீர் பிரச்சினையும் சேர்க்கப்பட்டிருப்பதானது, இந்தியாவின் உள்நாட்டு விவகாரங்களில் வெளிப்படையாகவே தலையிடுவதாகும் என்றும், பாகிஸ்தானுக்கும் இந்தியாவிற்கும் உள்ள உறவுகளைச் சீர்குலைக்கும் என்றும் அந்த வானெலி விமர்சனம் கூறுகிறது.

நம் நாடு

தி.மு.க.தின இதழ் — ஆசிரியர் இரா.நெடுஞ்செழியன்

சென்னை 14—3—57 வியாழன்

‘ஏக இந்தியா’க்கள் பாடம் பெறுவார்களா?

‘ஒற்றுமை’ என்ற சொல்லின் பொருளும் புனிதமும் அது குறித்து எண்ணும் மனித உள்ளத்தின் தன்மையைப் பொறுத்தன என்பதையும், ‘ஒற்றுமை வேண்டும்’ என்ற கவர்ச்சிகரமான — மினுமினுப்பான வாசகத்திற்காக ஒரு மக்கள் கூட்டம் தன் வாழ்வையும் வளத்தையும் சுதந்திரத்தையும் பிறிதோர் மக்கள் கூட்டத்திற்கு—அக்கூட்டம் வலுவானது என்பதால் காணிக்கை தந்துவிட முடியாது என்ற பொன்னான பாடத்தை, தமிழ் நாட்டில் வடநாட்டு ஏகாதிபத்தியத்தின் ‘பாதுகாவலர்’களாயுள்ள முற்போக்கு — பிற்போக்குக் கங்காணிகளான ‘அகில இந்தியா’க்கள் பெற வேண்டியிருப்பதை, இன்றைய இந்தோனேஷிய நிலைமை போதித்துக்கொண்டிருக்கிறது.

ஜாவா மாநில எல்லைக்குள் மட்டுமே செல்லுபடியாகும் என்ற அளவுக்கு இந்தோனேஷிய மத்திய சர்க்காரின் அதிகாரம் மதிப்பிழந்துவிட்டது; சுகர்ணோவின் செல்வாக்கு சுருங்கிவிட்டது.

மத்திய சுமத்திரா, வடக்கு சுமத்திரா, கிழக்கு இந்தோனேஷியா, தெற்கு சுமத்திரா, போர்னியோ என்ற ஒவ்வொரு மாநிலமும் தன்னை மத்திய ஆட்சியின் பிடிப்புக்குள்ளிருந்து விடுவித்துக்கொண்டு, தனியாட்சி—ஜகார்தா சர்க்காருக்கு எந்தவகையிலும் கட்டுப்படாத ஒரு சுய ஆட்சியை அமைத்துக்கொண்டுவிட்டதாக ‘சுதந்திரப் பிரகடனம்’ வெளியிட்டுள்ளது. இந்த மாநிலங்களில் எல்லாம் ‘புரட்சிக் கவுன்சில்’ அல்லது இராணுவத் தலைவர்களிடம் ஆட்சிப் பொறுப்பு சிக்கிவிட்டது.

இந்தோனேஷியாவின் வளமான மாநிலங்கள் எனப்படும் இவற்றின் இந்தத் தன்னாட்சிப் பிரகடனங்கள், எந்தவிதச் சிரமமும் இன்றி—துளி இரத்தம் கூடச் சிந்தப்படாமல், அதாவது பிரதேச மக்களின் மானசிக ஆதரவுடன் வெளியிடப்பட்டிருக்கின்றன என்று, சுகர்ணோவை ஆதரிக்கும் பத்திரிகைகளே செய்திகள் வெளியிட்டுள்ளன.

ஆழமான பொருளாதாரப் பிரச்சினைகளையும் மகத்தான அரசியல் விளைவுகளையும் உள்ளடக்கியதான நிலையில்தான் இருக்கிறது, இன்றைய இந்தோனேஷியா!

இந்த நிலை தோன்றியது எப்படி?

டெல்லி எப்படி சகல அதிகாரங்களையும் படைத்த எல்லாம் வல்ல இறைவனாக்கப்பட்டிருக்கிறதோ, அப்படித்தான் ஆக்கப்பட்டிருக்கிறது இந்தோனேஷியாவின் ஜகார்தாவும். டச்சு ஏகாதிபத்தியம் உருவாக்கிய இந்தோனேஷியா, எண்ணற்ற தீவுகளாலான பல மாநிலங்களையும் ஒரு குடையின்கீழ் கொண்டுவந்தது. டச்சு ஏகாதிபத்தியத்தின் பிடியிலிருந்து இந்தோனேஷியா விடுதலை பெற்றுப் பதினோரு ஆண்டுகளுக்கு மேலாகிவிட்டது.

டில்லியைப்போல் எல்லாம் வல்ல இறைவனாக்கப்பட்ட ஜகார்தா சர்க்கார், டில்லி ஏகாதிபத்தியவாதிகள் தென்னாட்டிற்கு—திராவிடத்திற்குப் புரியும் கொடூரமான அநீதிகளைப் போலவே, சுமத்திரா மாநிலங்களுக்கு அநீதி புரிவதாக அந்தப் பிரதேச மக்கள் கருதுகிறார்கள் என்று செய்திகள் கூறுகின்றன.

‘நூற்றில் 60 சதவிகித மக்களைக் கொண்ட ஜாவாவின் நலனுக்கே ஜகார்தா சர்க்கார் பாடுபடுகிறது; இதர மாநிலங்களின் நலன்களைத் துச்சமென மதிக்கிறது’ என்று, கிளர்ந்தெழுந்துள்ள மாநிலங்கள் குற்றம் சாட்டுகின்றன.

மேலும், ஜகார்தா சர்க்கார், மாகாணங்களின்மீது அளவுக்கு மீறி ஆதிக்கம் செலுத்துவதாகவும் மாகாணங்களின் வருமானத்தில் பெரும் பகுதியை அபகரித்துக் கொள்வதாகவும், அவர்கள் குமுறுகிறார்கள்.

ஜகார்தா, எல்லாம் வல்ல இறைவனாக இருக்கிறது!

ஜாவாவையே கவனிக்கிறது—இதர மாநிலங்களை அவமதிக்கிறது — அலட்சியப்படுத்துகிறது!

இதர மாகாணங்கள்மீது அளவுக்கு மீறி ஆதிக்கம் செலுத்துகிறது!

வருமானங்களைத் தட்டிப் பறித்துக்கொள்கிறது!

‘எனவே, நாங்கள் சுதந்திரம் கோருகின்றோம்; தன்னாட்சிப் பிரகடனம் செய்துள்ளோம்’ என்கின்றன, கிளர்ந்தெழுந்துள்ள மாநிலங்கள்!

இந்த மாநிலங்களில், ஓரிரண்டைத் தவிர ஏனையவை கோருவதெல்லாம், ‘எங்களுக்கு முழுச் சுதந்திரம்கூடத் தேவை இல்லை; எங்கள் விவகாரங்களை கூடியமட்டும் நாங்களே கவனித்துக்கொள்வதற்கு மத்திய சர்க்காரின் தலையீடு இல்லாத சுதந்திரம் எங்களுக்குவேண்டும்; மத்திய சர்க்காரின் வருமானத்தில் கணிசமான பங்கு தரப்படல் வேண்டும்,’ என்பவைதான்.

இந்த மாநிலங்கள், தங்களின் இந்தக் கோரிக்கைகளை நிறைவேற்றிக்கொள்ள மேற்கொண்டுள்ள ‘இராணுவப் புரட்சி’ போன்ற முறைகள், வேண்டுமானால் சரியானவையா என்ற ஆராய்ச்சிக்கு உட்படுத்தப்படலாம்; ஆனால் ‘ஒற்றுமை’ என்ற பெயரால் ஒரு மக்கள் கூட்டம் பிறிதொரு மக்கள் கூட்டத்தின் ஆதிக்கத்திற்கு உட்பட்டிருக்க வேண்டுமென்பது அநியாயம் எனக் கூறும் இந்தக் கோரிக்கைகளை, எவரும் தவறானவை எனக்கூறிவிட முடியாது.

இந்த நிலைகளைச் சமாளிக்க, சுகர்ணோ வெளியிட்டிருக்கும் புதிய திட்டம் பற்றியோ அல்லது இந்த நிலைகள் எதிர்காலத்தில் எடுக்கக்கூடிய உருவம்பற்றியோ நாம் இப்போது அதிகம் கவலைப்படத் தேவை இல்லை.

ஒன்றாக—ஒரே குடையின்கீழ் வாழ்வதற்குரிய அம்சங்கள் பல பெற்றிருக்கும் இந்தோனேஷிய மக்களே, மத்திய ஆட்சியின் பிடிப்பினால் தங்கள் சுதந்திரம், வாழ்வு, வளம் இவை பாதிக்கப்பட்டதாகக் கருதித் தன்னாட்சி பெற விழைகிறார்கள். ஆனால், ஒன்றாக வாழ்வதற்குரிய அம்சங்களே இல்லாத வடவரும் தென்னவரும் ஒரே ஆட்சியின்கீழ் இருக்க வேண்டுமாம். ‘ஒற்றுமை’ என்ற பெயருக்காக தமிழர்கள் — தென்னாட்டவர்கள், தங்கள் வாழ்வு, வளம், சுதந்திரம் இவற்றை வடவருக்குக் காணிக்கை தந்துவிட்டு வாட வேண்டியுள்ள நிலை தேவைதானா என்பதைத்தான் தமிழர்கள் சிந்திக்கவேண்டுகிறோம்.

இந்த நிலைக்கு நியாயம் கற்பித்து, தமிழகத்தை—திராவிடத்தை—பெற்ற தாயை வடவருக்கு வெள்ளாட்டியாக்க வேண்டுமென்று கூறும் ‘அகில இந்தியா’க்கள், இன்றைய இந்தோனேஷியாவிலிருந்து பாடம் பெறுவார்களா?

அடுத்த முதன் மந்திரி அவரேதானாம்!

சென்னை மார்ச் 12—

தமிழ்நாட்டின் அடுத்த முதன் மந்திரி காமராசர்தானாம்!

தான் ஒன்றும் அந்தப் பதவிக்குப் போட்டியிடப் போவதில்லையாம்!

கூறியுள்ளார், நிதியமைச்சர் சுப்பிரமணியம்!

போட்டியின்றியே காமராசர் தேர்ந்தெடுக்கப்படுவாராம்!

நகரசுத்தித் தொழிலாளர் வேலைநிறுத்தம்!

பாட்னா, மார்ச் 12— தங்களுடைய கோரிக்கைகள் முழுவதுமாகத் தீர்க்கப்படவில்லை என்ற காரணத்திற்காகப் பாட்னா நகராண்மைக் கழகத்தில் வேலை செய்யும் சுமார் 1,000 நகரசுத்தித் தொழிலாளர்கள் வேலைநிறுத்தம் செய்துள்ளனர்.

ஊதிய விகிதத்தைத் திருத்தி அமைப்பது, மத்திய சர்க்கார் ஊழியர்களுக்குத் தரப்படும் விகிதத்தில் கிராக்கிப்படி, வீட்டு வாடகை, அலவன்ஸ், மற்றும் கிராஜுடி ஆகியவைகளே அவர்கள் எழுப்பிய கோரிக்கைகளாகும்.

தொழிலாளர்களின் இந்தத் திடீர் வேலைநிறுத்தம் சட்டவரம்புக்கு மீறிய செயல் என்றும், இந்நடவடிக்கையில் ஒரு குறிப்பிட்ட சாராரே ஈடுபட்டிருக்கின்றனர் என்றும், விசுவாசமுள்ள மற்ற ஊழியர்கள் தொடர்ந்து வேலைகளைக் கவனித்து வருகின்றனர் என்றும் நகராண்மைக் கழக அதிகாரி ஒருவர் கூறியிருக்கிறாராம்.

என்ன நோக்கமோ?

ஜம்மு, மார்ச் 12— பாகிஸ்தான் வசத்திலிருக்கும் காஷ்மீர் மாநிலப் பகுதிகளில்—குறிப்பாக கில்ஜித், சித்ரால் ஆகிய இடங்களில் மக்களின் குடியிருப்பு வீடுகளையெல்லாம் இடித்துத் தரைமட்டமாக்கி, அப்பகுதியை ஒரு விமானத்தளமாக்குவதற்கான வேலைகளை பாகிஸ்தான் சர்க்கார் செய்து வருவதாக காஷ்மீர் பிரதமர் தெரிவித்திருக்கிறாராம்.

சர்க்கார் ஊழியர்களும் கலாச்சாரநிறுவனங்களும்

சென்னை, மார்ச் 12— இந்திய வெளிநாட்டு கலாச்சார நிறுவனங்களின் நடவடிக்கைகளில் அரசாங்க ஊழியர்கள் பங்கு கொள்ளக்கூடாது என்று முடிவு செய்திருப்பதாகத் தெரியவருகிறது.

ஆசிரியருக்குக் கடிதம் :

இரட்டை உறுப்பினர் தொகுதிகளில் வாக்காளர் குழப்பம்

ஐயா,

அண்மையில் நடைபெற்ற பொதுத் தேர்தலில், இரட்டை உறுப்பினர் தொகுதிகளில் வாக்காளர்கள் பெருங்குழப்பத்திற்கு ஆளாகியிருக்கின்றனர். வாக்காளரிடம் தரப்படும் பொதுத் தொகுதி, தனித் தொகுதிக்கான வாக்குச் சீட்டுகளில், எது பொதுத் தொகுதி, எது தனித் தொகுதிக்கான வாக்குச் சீட்டு என்று தெரியாமல் திகைக்கின்றனர். தேர்தல் அதிகாரியிடம் விவரம் கேட்டாலோ, அதிகாரிகள், ‘இரண்டு சீட்டுகளையும் ஏதாவது இரண்டு பெட்டியில், பெட்டிக்கு ஒன்றாக உங்கள் விருப்பம்போல் போடுங்கள்’ என்று கூறி, தங்கள் கடமையைச் செய்கின்றார்கள்.

இரட்டை உறுப்பினர் தொகுதியின் ஓட்டுச் சாவடிகளில், இரு தொகுதிப் பெட்டிகளையும் ஒரே அறையில் வைத்திருக்கின்றார்கள். தவிர, தனித் தொகுதிக்குப் போட்டியிடும் பல அபேட்சகர்களின் பெட்டிகள் ஒன்றின் பக்கத்தில் ஒன்றாக வைக்கப்பட்டிருக்கின்றன. இன்றைய சூழ்நிலையில் பெரும்பான்மையான ஓட்டர்கள் விவரம் புரியாமல் இருக்கின்றார்கள். விவரம் அறியாத ஓட்டர்கள் இரண்டு ஓட்டுச் சீட்டுக்களையும் பெற்றுக் கொண்டு உள் சென்றதும், சிலர் இரண்டு சீட்டுக்களையுமே ஒரே பெட்டியிலும், சிலர் இரண்டு சீட்டுகளையும் இரண்டு தனித் தொகுதி பெட்டிகளிலும் போட்டுவிடுகின்றனர். இவ்வாறு வாக்களிப்பதினால் பொதுத் தொகுதிக்குப் போட்டியிடும் அபேட்சகர்களுக்குக் கிடைக்கவேண்டிய வாக்குகள் கிடைக்காமல் போய்விடுகின்றன. தவிரவும், ஒரு ஓட்டைப் போட்டுவிட்டு மற்றொரு ஓட்டை விவரம் புரியாமல் வெளியே எடுத்துக்கொண்டு வந்துவிடுகின்றார்கள். இந்தக் குறைபாட்டைக் கவனிப்பதற்கே ஓட்டுச்சாவடியில் உள்ள தேர்தல் அதிகாரிகளுக்கும் தேர்தல் சிப்பந்திகளுக்கும் அபேட்சகரின் பிரதிநிதிகளுக்கும் பெரிய சிரமமாக இருக்கிறது.

இந்த முறையில் வாக்காளர்களுக்குக் குழப்பம் ஏற்பட்டுவிடுகின்றபடியால், இரட்டை உறுப்பினர் தொகுதிக்கு போட்டியிடும் ஒரே கட்சியைச் சேர்ந்த அபேட்சகர்களில் பொதுத் தொகுதி அபேட்சகர் வெற்றி பெற்றுத் தனித் தொகுதி அபேட்சகர் தோல்வி அடைவதும், தனித் தொகுதி அபேட்சகர் வெற்றி பெற்றுப் பொதுத் தொகுதி அபேட்சகர் தோல்வி அடைவதுமான சூழ்நிலைகள் ஏற்பட்டிருக்கின்றன.

ஆகவே, இதுமாதிரியான சிக்கலான சூழ்நிலை இனிமேலும் வாக்காளர்களுக்கு ஏற்படாத முறையில், இனி நடைபெறும் எல்லாத் தேர்தல்களிலும் இரட்டை உறுப்பினர் தொகுதிகளுக்கு, மாநில சட்டசபைக்கும் மத்திய சட்டசபைக்கும் தனித்தனி அறைகள், தனித்தனி கலர் ஓட்டுச் சீட்டுகள் இருப்பதைப்போல், பொதுத் தொகுதிக்கு ஒரு அறையும் தனித் தொகுதிக்கு ஒரு அறையும் வைத்து, ஓட்டுச் சீட்டுகளுக்கும் கலரில் வித்தியாசம் காண்பித்துத் தேர்தல்களை நடத்தினால் வாக்காளர்கள் எவ்விதமான குழப்பங்களுக்கும் ஆளாகாமல் வாக்களிக்கமுடியும். இதனை அரசியலாரும் தேர்தல் கமிஷனரும் கவனித்து ஆவன செய்ய சர்வகட்சியினரும் முயற்சிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

சி. எல்லப்பன்
சென்னை—12.

வேவு பார்க்காதீர்! பலாத்காரப் பிரச்சாரம் செய்யாதீர்!

அமெரிக்க கம்யூனிஸ்டுகளுக்கு புதிய கட்டளை

அமெரிக்க ஜனநாயகத்திற்குப் பாராட்டு!

கம்யூனிஸ்டுகள், மாஸ்கோவிற்காக வேவு பார்ப்பவர்கள்—பலாத்காரம் மூலம் அரசைக் கைப்பற்றுபவர்கள் என்ற உண்மையை ஒப்பும் வகையிலும், ஆனால் அமெரிக்கக் கம்யூனிஸ்டுகள் இந்த ‘இரண்டு வேலைகளை’யும் செய்யக்கூடாது என்று கட்டளையிடும் வகையிலும் அமெரிக்கக் கம்யூனிஸ்டு கட்சியின் புதிய சட்ட திட்டம் அமைந்திருக்கிறதாம்!

பலாத்காரம், அராஜகம் இவை பற்றி பிரச்சாரம் செய்வதும் வேவு பார்ப்பதும் கூடாது என்றும், அப்படி இந்த வேலைகளில் ஈடுபடுவோர் கட்சியிலிருந்து நீக்கப்படுவர் என்றும் அமெரிக்கக் கம்யூனிஸ்டு கட்சியின் புதிய சட்ட திட்டம் கூறுகிறது.

ஜனநாயகத்திற்கு வேட்டு வைக்காதீர்!

அமெரிக்க ஜனநாயகத்தின் எந்த ஒரு அங்கத்தையும் பலவீனப்படுத்தவோ சிதைக்கவோ, தூக்கி எறியவோ அதற்கான சதிகளில் ஈடுபடவோ செய்யும் உறுப்பினர்களும் கட்சியிலிருந்து நீக்கப்படுவர் என்றும் புதிய சட்டம் கூறுகிறது.

பகைமூட்டுவோர், வேலைநிறுத்தத் தூண்டுவோரும் கட்சியிலிருந்து கல்தா தரப்படுவர் என்றும் சட்டம் கூறுவது, அமெரிக்க சர்க்காரையும் உலக மக்களையும் ஏமாற்றுவதற்காகச் செய்யப்பட்ட பிரிவோ என்ற ஐயத்தைத் தோற்றுவிக்கிறது.

அமெரிக்கக் கம்யூனிஸ்டு கட்சி அமெரிக்க ஜனநாயக அரசு முறையைப் பாராட்டுகிறது என்று கருதத்தக்க வகையில், அந்தச் சட்டம், பெரும்பான்மையான அமெரிக்க மக்கள் தங்கள் தலைவிதியை நிர்ணயித்துக்கொள்ள ஜனநாயகத்தின் மூலம் உரிமை பெற்றிருக்கின்றனர் என்று கூறியுள்ளது.

அதனால்தான், ‘அமெரிக்க ஜனநாயகத்தின் எந்த ஒரு அங்கத்திற்கும் எவ்வித ஊறும் தேட முயற்சிக்கக்கூடாது’ என்று, உறுப்பினர்களுக்குக் கட்டளையிடுகிறது போலும்!

‘மௌன ஊர்வலம்’

சர்க்கார் போக்குக் கண்டு கிராம அதிகாரிகள் முடிவு

தங்களுடைய கோரிக்கைகளுக்குச் சிறிதுகூட சர்க்கார் செவிமடுக்காது கவலையற்றிருப்பது குறித்துத் தங்கள் கண்டனத்தைத் தெரிவிக்கும் முறையில்,

(4-ம் பக்கம் பார்க்க)

யாருக்கு சிங்கள இனவெறி அதிகம்?

கொத்தலாவலையும் பண்டாவும் போட்டி போடுகின்றனர்

தமிழர்களைத் துரத்துவதில் தீவிரம் காட்டவில்லை என பரஸ்பரக் குற்றச்சாட்டு

கொழும்பு, மார்ச் 13—

இலங்கையிலிருந்து தமிழர்களைத் துரத்துவதில் யார் தீவிரவாதி என்பதில் கொத்தலாவலையும், பண்டாரநாயகாவும் சண்டையிட்டுக் கொள்கின்றனர்.

பரஸ்பரக் குற்றச்சாட்டு

கொத்தலாவலை பிரதமராயிருக்கும்போது, பண்டாவும் அவரது சகாக்களும், 'தமிழர்களைத் துரத்துவதில் கொத்தலாவலை தீவிரம் காட்டவில்லை; சிங்களத்தை மட்டுமே ஆட்சிமொழியாக்குவதில் அவசரம் காட்டவில்லை,' என்று குற்றஞ்சாட்டினார்கள்.

இப்போது, 'தமிழர்களை இலங்கையிலிருந்து துரத்துவதில் பண்டாரநாயகா தீவிரம் காட்டவில்லை,' என்று கொத்தலாவலை குற்றம் சாட்டுகிறார்.

போட்டி

இப்படி இருசாராரும் 'நாங்கள்தான் முற்றிப்போன சிங்கள வெறியர்கள்,' என்று நிலைநாட்டிக்கொள்வதில் போட்டியிடுகின்றனர்.

மாநாடு

கொத்தலாவலை தனது ஐக்கிய தேசியக்கட்சியின் மாநாடொன்றில் பேசும்போது, "பண்டாரநாயகா இந்தியர் பிரஜா உரிமைப் பிரச்சினைபற்றி விவாதிப்பதைத் தள்ளிப்போடுவது என்? இவர் தவறான நடவடிக்கையை மேற்கொண்டால் அது, சுமார் 4,80,000 தமிழர்களுக்கு பிரஜா உரிமையை வழங்கும்; அப்படிச் செய்யப்பட்டால், அதுவே சிங்களவருக்குத் தோண்டப்படும் புதைகுழியாகும்" என்று கூறினாராம்.

மேலும் பேசிய அவர், 'தமிழரைத் துரத்துவதில் தீவிரம் காட்ட பண்டாரநாயகா மறுப்பதற்குக் காரணம், அவர் தனது மந்திரிசபையில் உள்ள கம்யூனிஸ்டுகளுக்குப் பயப்படுவதேயாகும்' என்றும் கூறியிருக்கிறார்.

வடநாட்டு அமைச்சர்கள் மண்ணைகவ்வுகிறார்கள்

மக்கள் அளித்த மகத்தான தீர்ப்பு!

ஹோசியார்பூர் சம்பவங்களுக்கு எதிரான ஆர்ப்பாட்டங்களின் மத்தியக் கேந்திரமான பகுதிகளிலெல்லாம், காங்கிரஸ் அபேட்சகர்கள் — குறிப்பாக அமைச்சர்களும் உதவி அமைச்சர்களும் படுதோல்வி கண்டு மண்ணைக் கவ்வுகின்றனர்.

ரோடக் மாவட்டத்தைச் சேர்ந்த ஜஜ்ஜார் இரட்டைத் தொகுதியில், நேரடிப் போட்டிக்கு முன்வந்த காங்கிரஸ் அபேட்சகரான மாநில பஞ்சாயத்துக்கள் மந்திரி ஒருவரைவிட 1,839 வாக்குகள் அதிகம் பெற்று கம்யூனிஸ்டு அபேட்சகர் வெற்றி பெற்றிருக்கிறார்.

பஞ்சாப் மாநில சட்டசபைத் தேர்தலில் தோற்றுப்போன அமைச்சர்களில் இவர் மூன்றாவது நபர் ஆவார்.

அடுத்து, லூதியானா நகரத் தொகுதியிலும், காங்கிரஸ் அபேட்சகரை, ஜனசங்க அபேட்சகர் தோற்கடித்திருக்கிறார்.

அசாம் மாநிலத் தலைநகரான ஷில்லாங் நகரத் தொகுதியிலும் காங்கிரஸ் அபேட்சகரை, மலைநாட்டு இனத்தவரான ஒருவர் தோற்கடித்திருக்கிறார்.

பஞ்சாப் மந்திரி சபையில் முன்னாள் உறுப்பினராக—கல்வி மந்திரியாக இருந்து பிறகு காங்கிரஸை விட்டு விலகி 'லோக் ராஜ்' என்ற கட்சியை ஆரம்பித்த, ஜுலந்தர் நகர தென்மேற்குத் தொகுதியில் போட்டியிட்ட லாலா ஜெகத் நாராயண் அவர்கள், காங்கிரஸ் அபேட்சகரைவிட சுமார் 3,000 வாக்குகள் அதிகம் பெற்று வெற்றியடைந்திருக்கிறார்.

இந்த லாலா ஜெகத் நாராயண் மீது, அவர் மந்திரியாக இருந்த காலத்தில் சில இலஞ்சக் குற்றங்களும் மோசடியில் ஈடுபட்டதாகச் சில குற்றங்களும் சாட்டப்பட்டது நினைவிருக்கலாம்.

புதுடில்லி, மார்ச் 12— பர்மாவுக்கு இந்தியா ரூ. 20 கோடி கடன் அளிக்கும் ஒப்பந்தம் கையெழுத்தாகிவிட்டது.

சிங்கப்பூருக்கு சுயாட்சி: தூதுக் குழுவின் கோரிக்கைகள் விளக்கம்

பிரிட்டிஷ் சர்க்கார் போக்கு எவ்வாறிருக்கும்?

இலண்டன், மார்ச் 11— சட்டசபையிலும் மந்திரி சபையிலும் உத்தியோகப் பொறுப்புடனிருக்கும் உறுப்பினர்கள் நீக்கப்படல்வேண்டும்; நிதி இலாகா செயலாளர் பதவி போன்று பிரிட்டிஷ் காலனி இலாகா அலுவலகத்தவரால் வகிக்கப்படும் பதவிகள் தேர்ந்தெடுக்கப்பட்ட மந்திரிகளின் வசமிருக்கவேண்டும்; இராணியின் பிரதிநிதியான கவர்னர்-ஜெனரல், ஒரு மலாயராக இருக்கவேண்டும்; மூன்று பிரிட்டானியர், மூன்று சிங்கப்பூர் பிரதிநிதிகள், ஒரு மலாயர் ஆகிய எழு பேரடங்கிய குழுவினரிடத்தில் தற்காப்பு இலாகாவின் சில பிரிவுகள் ஒப்படைக்கப்படவேண்டும்—என்பன போன்ற அம்சங்களடங்கிய சுயாட்சிக் கோரிக்கையை, சிங்கப்பூர் சர்வகட்சிப் பிரதிநிதிகள் பிரிட்டிஷ் சர்க்கார் முன் வைத்திருக்கின்றனர்.

முதன் மந்திரி லிம் யூ ஹாக் தலைமையில் சிங்கப்பூருக்கு சுயாட்சி பெறுவதற்காக சர்வ கட்சித் தூதுக்குழு ஒன்று இங்கிலாந்து சென்றிருப்பது தெரிந்ததே!

தூதுக்குழுவினர் சிங்கப்பூரின் வெளிநாட்டு விவகாரங்கள், வெளிநாட்டுப் படையெடுப்பிலிருந்து பாதுகாப்பு ஆகியவை பிரிட்டிஷ் சர்க்காரிடமே இருப்பதற்கும் சம்மதம் தெரிவித்தே சுயாட்சிக் கோரிக்கையை வலியுறுத்துகின்றனர்.

ஆனால் வெளிநாட்டு வர்த்தகம், கலாச்சாரத் தொடர்பு ஆகியவை சிங்கப்பூரிடமே இருக்கவேண்டும் என்றும் தூதுக்குழுவினர் கோரியுள்ளனர்.

'கடைநிலை ஊழியர்களுக்கு நியாயம் வழங்கப்படவில்லை'

தெ. இ. ஊழியர் சங்க முறையீடு

சென்னை, மார்ச் 13—

அண்மையில் இரயில்வே துறையில் பணியாற்றும் சர்க்கார் பதிவு பெறாத ஊழியர்களுக்குப் பதவி உயர்வு தருவது குறித்து இரயில்வே அமைச்சர் வெளியிட்ட அறிவிப்பில், நாலாந்தர ஊழியர்களுக்கும், வர்த்தகத் துறை குமாஸ்தாக்களுக்கும் தகுந்த நியாயம் வழங்கப்படவில்லை என்பதை எடுத்துக்காட்டி தென்பிராந்திய இரயில்வே ஊழியர் சங்கத்தவர் தங்கள் சங்கக் கூட்டம் ஒன்றில் வருத்தம் தெரிவித்துத் தீர்மானம் ஒன்றை நிறைவேற்றியிருக்கின்றனர் என்று தெரிகிறது.

'ரிடையர்' ஆனவர்களையெல்லாம் வேலைக்கு வைத்துக் கொள்வதைவிட, நிரந்தர ஊழியர்களாகப் பணியாற்றும் தகுதியுடைய நான்காந்தரப் பகுதி ஊழியர்களில் 10 சதவிகிதத்தினருக்காவது உடனடியாகப் பதவி உயர்வு தரப்பட வேண்டும் என்றும், அத்தீர்மானத்தின் மூலம் தங்கள் கோரிக்கையை வற்புறுத்தியிருக்கின்றனர்.

'இந்திய வெளிவிவகாரக் கொள்கை படுதோல்வி யடைந்துவிட்டது'

காங்கிரஸ் நிலைபற்றி கிருபளானி கருத்து

அலகாபாத், மார்ச் 12—

"இந்தியாவின் வெளிவிவகாரக் கொள்கை படுதோல்வியடைந்துவிட்டது. உலக நாடுகளின் அரங்கில், இன்றைய நிலையில், ஒரு நாடாவது இந்தியாவின் நட்புக்குரிய நாடாக இல்லை," என்று, பி. சோ. கட்சித் தலைவரான ஆச்சாரியா கிருபளானி அவர்கள், இங்கு நடைபெற்றக் கூட்டம் ஒன்றில் பேசும்போது குறிப்பிட்டிருக்கிறார்.

"காந்தியாரின் தலைமையின் கீழ் இயங்கிவந்த அன்றைய காங்கிரஸ், ஒரு பெரும் ஏகாதிபத்தியமான பிரிட்டனையேகூட 'இந்தியாவை விட்டு வெளியேறு' என்று துணிந்து கூறியது; அன்று அவ்வளவு பலம் வாய்ந்ததாக காங்கிரஸ் இருந்தது ஆனால் இன்றோ, அதற்கு நேர்மாறாக, இன்றைய காங்கிரசாரின் கையில் இருக்கிற இந்திய சர்க்காரால், ஒரு சின்ன பகுதியான கோவாவைவிட்டு வெளியேறும்படி போர்ச்சுகீசியருக்கு 'நோட்டீஸ்' தருவதற்குக்கூட இலாயக்கற்றதாகி விட்டது" என்றும் அவர் குறிப்பிட்டிருக்கிறார்.

சென்னைக்கு மூன்று மீன் பிடிக்கும் துறைகள்

சென்னை, மார்ச் 12—

நாகப்பட்டிணம், கடலூர், கன்னியாகுமரி ஆகிய மூன்று பகுதிகளில் கடற்கரையோரமாகத் துறைமுகங்களைக் கட்டி மீன் பிடிக்கும் தொழிலை ஊக்குவிக்க சென்னை அரசாங்கம் திட்டமிட்டிருக்கிறதாம். இதற்காக மேல்நாட்டு நிபுணர்களைக் கொண்டு துப்புறவு நடத்த உத்திரவிடப்பட்டுள்ளதாம்.

கிரெம்ளின் வாசிகள் விடுதலையின் பரமவிரோதிகளா?

யூகோவின் சுதந்திரமான கொள்கை கண்டு காய்வதேன்?

தங்களை எசமானர்களாக ஏற்க மறுத்தால் வசைமாரியா?

மாஸ்கோவாழ் கிரெம்ளின் வாசிகள், சுதந்திரத்தின் பரம விரோதிகளா என்ன ஐயுறும்வண்ணம், சுதந்திரமான—மாஸ்கோவிற்குக் கட்டுப்பட விரும்பாத ஒரு 'சோஷலிச' நாடான யூகோ மீது மாஸ்கோ வாசிகள் ஏவிவரும் குற்றச்சாட்டுகள், முட்டிவரும் பகை, நடத்திவரும் துஷ்பிரச்சாரம் இவை எல்லாம் அமைந்திருக்கின்றன என்று யூகோ நாட்டு பத்திரிகைகள் கூறுகின்றன.

முகாம்களில் சேரமாட்டோம்

"யூகோ எந்த ஒரு முகாமிலும் அணியிலும்—அது மேற்கு வல்லரசுகளின் முகாமோ கிழக்கு முகாமோ —எதிலும் சேராது—சேர விரும்பவில்லை.

"யூகோவை, ரஷ்யாவின் முகாமில் சேர்த்துவிட மேற்கொண்ட முயற்சிகள் தோல்வியுற்ற நாள்முதல் இந்த யூகோ எதிர்ப்புப் பிரச்சாரம் துவங்கியிருக்கிறது," என்றும், கிரெம்ளின்வாசிகளின் சுதந்திர விரோத சுயரூபத்தை அம்பலப்படுத்துகிறது 'பார்பா'.

சகஜீவனம்!

"உலகில் கூடிவாழ்தல், சகஜீவனம் என்ற கொள்கை வெற்றி பெற வேண்டும் என்பதில் நம்பிக்கைகொண்டு அந்தக் கொள்கையைப் பின்பற்றுவதில் பெற்ற மகத்தான வெற்றிதான் யூகோ—அமெரிக்க ஒத்துழைப்பு. இந்த ஒத்துழைப்புக்கான திட்டம் கண்டபின், கிரெம்ளின் வாசிகளின் தாக்குதல் தீவிரமாகியிருக்கிறது என்றும் 'பார்பா' கூறுகிறது.

விரோதமான பிரச்சாரம்

ரஷ்யாவின் பத்திரிகைகள், யூகோஸ்லேவியாவிற்கு விரோதமான பிரச்சாரத்தில் ஈடுபட்டிருப்பதாக யூகோ பத்திரிகையான 'பார்பா' கூறுகிறது.

மனம்போன போக்கில்

'ரஷ்யா, மற்றும் சில கிழக்கு ஐரோப்பிய நாடுகள் எந்தவித முகாந்தரமும் இன்றி, மனம் போன போக்கில் யூகோவை வசைமாரி பாடுகின்றன' என்று 'பார்பா' தெரிவிக்கிறது.

காரணம் என்ன?

"யூகோவிற்கு எதிரான இந்த பிரச்சாரத்திற்குக் காரணம் என்ன? யூகோ கடைப்பிடித்து வரும் சுதந்திரமான வெளிநாட்டுக் கொள்கை கிரெம்ளின் வாசிகளுக்குப் பிடிக்கவில்லை; மேலும், யூகோ சர்க்கார் உள்நாட்டில் கடைப்பிடிக்கும் சுதந்திரமான சோஷலிச இயக்கமுறைகளும் அவர்களுக்கு விருப்பமானதாக இல்லை' என்றும் 'பார்பா' கூறுகிறது.

விரிவாகிவரும் பிளவைத் தடுக்க— 'ஒற்றுமைப் பாலம்' கட்ட!

டில்லி மேற்கொள்ளும் மற்றொரு நடவடிக்கை

'தேசியக் காலண்டர்' மார்ச் 22-ந்தேதி முதல் அமுலாகுமாம்

புதுடில்லி, மார்ச் 12—

'இந்தியா' என்ற அரசியல் அமைப்பை உறுதிசெய்வதற்காக, வடக்கிற்கும் தெற்கிற்குமிடையே விரிவாகிவரும் பிளவினைத் தடுத்து நிறுத்தி 'ஒற்றுமைப் பாலம்' கட்டவேண்டுமென்னும் ஏகாதிபத்திய நோக்கத்துடன் டில்லிப் பேரரசு மேற்கொள்ளும் மற்றொரு நடவடிக்கையான 'தேசீயக் காலண்டர்' புகுத்தும் நடவடிக்கை வரும் மார்ச் 22-ந்தேதியன்று அமுலாகுமாம்.

'சகா சகாப்த'த்துடன் துவங்கும் இந்தக் காலண்டருடன், இப்போதிருக்கும் 'கிரிகோரியன் காலண்டர்'ரும் கொஞ்ச காலத்திற்கு ஆட்சி அலுவல்களில் உபயோகிக்கப்பட்டு வருமாம்.

இந்தப் புதிய காலண்டரின்படி 'சித்ரா' என்ற மாதம் முதலாவது மாதமாக இருக்கும் என்பதும், சாதாரண வருஷம் 365 நாட்களையும், லீப் வருஷம் 366 நாட்களையும் கொண்டதாயிருக்கும் என்பதும் தெரிந்ததே!

பத்தாவது படித்தவர்களுக்கு வேலைதரத் திட்டங்கள்

தமிழகத்திற்குப் பங்கு உண்டா?

புதுடில்லி, மார்ச் 13—

பத்தாவது வகுப்புவரை படித்தவர்களுக்கு, வேலைதருவதற்கென சுமார் 17 உற்பத்தி நிலையங்களை இந்தியா முழுவதிலுமாக நிறுவ டில்லி சர்க்கார் உத்தேசித்திருக்கின்றனர்களாம்.

இந்த உத்தேசத்தின் கீழ் அமையும் உற்பத்தி நிலையங்களில் ஒன்றிரண்டேனும் தமிழகத்தில் நிறுவப்படுமா என்பது தெரியவில்லை.

கேரளத்தில் இதுபோன்ற இரண்டு உற்பத்தி நிலையங்கள் நிறுவுவதற்காக ரூ. 17 இலட்சம் ஒதுக்கப்பட்டிருக்கிறதாம்.

காங்கிரசுக்கு பொதுத் தேர்தல் தரும் படிப்பினை

அகமதாபாத் நகரசபைத் தேர்தலில் போட்டியிடுவதில்லை என முடிவு

இரு மொழி பம்பாய் மாநில ஏற்பாட்டிற்கு மக்கள் காட்டும் எதிர்ப்பு

குசராத் காங்கிரஸ் தலைவர் ஒப்புதல்

நடைபெறும் பொதுத் தேர்தல்கள், எத்தனையோ மகத்தான மாறுதல்களையும் விளைவுகளையும் உண்டாக்கியிருக்கிறது; என்று லும், அகமதாபாத்தில் ஒரு முக்கியமான விளைவை உண்டுபண்ணி யுள்ளது.

அகமதாபாத் நகரசபைத் தேர்தல்களில் இனி காங்கிரஸ் ஒரு கட்சி என்ற முறையில் போட்டியிடாது என்பதுடன், எவருக்கும் ஆதரவும் தராதாம். இந்த நகரசபைத் தேர்தல் வரும் ஏப்ரலில் நடைபெறவிருக்கிறது.

இந்த முடிவை குசராத் பிரதேச காங்கிரஸ் தலைவரே அறிக்கை மூலம் வெளியிட்டிருக்கிறார்.

"அகமதாபாத் நகரைப் பொறுத்து பெரும்பான்மையான மக்கள் மகாகுசராத் மாநில அமைப்பையே விரும்புகிறார்கள் என்றும், காங்கிரஸ் கடைபிடித்த இரு மொழி பம்பாய் என்ற கோட்பாட்டினை வெறுக்கிறார்கள் என்றும் தேர்தல் முடிவுகள் காங்கிரசுக்குத் தோல்விகளையே தந்திருப்பதிலிருந்து தெரியவருகிறது; எனவே, இந்த நிலையில் காங்கிரஸ், அகமதாபாத் நகரசபைத் தேர்தலில் போட்டியிடுவது உசிதமல்ல என்று கருதுகிறது,"

என்பதாக, குசராத் பிரதேசக் காங்கிரஸ் தலைவர் மகன் பாய் பட்டேல் தனது அறிக்கையில் கூறுகிறார்.

சரித்திரம் காணாதது

இதுபோன்ற முடிவை காங்கிரஸ் சரித்திரம் இதுவரை கண்டதில்லையாம்! கடந்த 20 ஆண்டுகளாகக் காங்கிரஸ், அகமதாபாத் நகரசபை நிர்வாகத்தில் பங்கு பெற்று வந்திருக்கிறது. சர்தார் படேல், ஜி. வி. மாவ்லங்கர் போன்ற தலைவர்கள் எல்லாம் அந்த நிர்வாகத்தில் பங்கு பற்றியிருந்தவர்களாவர்.

100 குடிசைகள் சாம்பலாயின

6 உயிர்கள் பலி

டில்லியில் விமான விபத்து

புதுடில்லி, மார்ச் 13—

ஆறு பேர்களைப் பலிகொண்ட விமான விபத்து ஒன்று இன்று காலை 9-15 மணிக்கு இங்கு ஏற்பட்டது.

இந்திய விமானப் போக்குவரத்து கார்ப்பரேஷனைச் சேர்ந்த டகோடா விமானம் ஒன்றை இரு அதிகாரிகள், சோதனை செய்வதற்காக அதில் ஏறிப் பறந்த போது அது பயங்கரமான பேரிரைச்சலுடன் தலைகீழாகப் பாய்ந்து குடிசை ஒன்றில் மோதி தீப்பிடித்து எரிந்து சாம்பலாயிற்றாம்.

விமானத்திலிருந்த இருவரும், குடிசையிலிருந்த நான்கு பேரடங்கிய குடும்பமும் விபத்திற்கு பலியாயினராம். அத்துடன், அருகிலிருந்த 100 குடிசைகளும் தீப்பிடித்துஎறிந்துசாம்பலாயினவாம்

ஜனநாயகக் கடமையாற்ற களம்புகுந்த கழக வீரர்கள்

விடுதலை உணர்வு பெற்ற மக்களின் எண்ணிக்கை விவரம்

ஒரு கட்சி ஆதிக்கம் ஏற்பட்டு அதனால் ஏற்படும் பயங்கர விளைவான சர்வாதிகாரத்தைத் தடுத்து நிறுத்தி, நாட்டில் நல்லதோர் ஜனநாயக மணம் கமழ வேண்டுமென்ற உயரிய இலட்சியத்திற்காகவும் மக்களில் எத்தனை ஆயிரம் பேருக்கு விடுதலை உணர்வு தோன்றியுள்ளது என்பதை அறிந்துகொள்வதற்காகவும் கடமையாற்றக் களம் புகுந்த வீரர்கள் பெற்ற வாக்கு விவரங்கள் கீழே தரப்படுகின்றன:

சென்னை நகர் வண்ணைத் தொகுதியில் நமது கழக அபேட்சகரான தோழர் என். சிவராத்தினம் அவர்களைவிட 491 வாக்குகள் மட்டுமே அதிகம் பெற்று காங்கிரஸ் அபேட்சகர் வெற்றி பெற்றதாக அறிவிக்கப்பட்டிருக்கிறது.

தோழர் சிவராத்தினம் அவர்களுக்கு 11,279 வாக்குகளும், காங்கிரஸ் அபேட்சகருக்கு 11,770 வாக்குகளும் கிடைத்தன. திரு. பி. எம். லிங்கேசன் அவர்களுக்கு 9,152 வாக்குகள் கிடைத்துள்ளன. கம்யூனிஸ்டு அபேட்சகர் ஏ. எஸ். கே. அய்யங்காருக்கு 7,005 வாக்குகள் மட்டுமே கிடைத்துள்ளன. மற்றொரு சுயேச்சையான தெய்வசிகாமணிக்கு 707 வாக்குகள்தான் கிடைத்துள்ளன.

வ. ஆ. மாவட்டம் ஆம்பூர் தொகுதியில் கழக அபேட்சகர் தோழர் சம்பங்கி அவர்களைவிட 457 வாக்குகள் மட்டும் அதிகம் பெற்று காங்கிரஸ் அபேட்சகர் வெற்றிபெற்றிருக்கிறார். தோழர் சம்பங்கி அவர்களுக்கு 25,105 வாக்குகளும், காங்கிரஸ் அபேட்சகருக்கு 25,562 வாக்குகளும் கிடைத்துள்ளன.

அரவக்குறிச்சி தொகுதியில் கழக அபேட்சகர் தோழர் என். இரத்தினம் அவர்களுக்கு 15,920 வாக்குகளும், காங்கிரஸ் அபேட்சகருக்கு 24,736 வாக்குகளும் கிடைத்து காங்கிரஸ் அபேட்சகர் வெற்றி பெற்றதாக அறிவிக்கப்பட்டது.

மதுரை மத்தியத் தொகுதியில் காங்கிரஸ் அபேட்சகருக்கு 20,305 வாக்குகளும், கழக அபேட்சகர் தோழர் எஸ். முத்துவுக்கு 9,872 வாக்குகளும் கிடைத்து காங்கிரஸ் அபேட்சகர் வெற்றி பெற்றதாக அறிவிக்கப்பட்டது.

மற்றும் மன்னார்குடி, புவனகிரி, இராணிப்பேட்டை, அரக்கோணம், முசிறி (இரட்டைத் தொகுதி), கோவை (1), நாகர்கோவில், குளச்சல் ஆகிய தொகுதிகளில் தி. மு. கழக அபேட்சகர்களைவிட அதிக வாக்குகள் பெற்று காங்கிரஸ் அபேட்சகர்கள் வெற்றி பெற்றிருக்கின்றனர்.

பல்லடம் தொகுதியில் பி. சோ. கட்சி அபேட்சகரான பி. எஸ். சின்னதுரை, காங்கிரஸ் அபேட்சகரைவிட சுமார் 10,000 வாக்குகள் அதிகம் பெற்று வெற்றி பெற்றிருக்கிறார்.

திருமங்கலம் தொகுதியில் காங்கிரஸ் அபேட்சகரான முன்னாள் மந்திரி இராசாராம் நாயுடுவை விட சுமார் 5,000-த்திற்கும் அதிகமான வாக்குகள் பெற்று காங்கிரஸ் சீர்திருத்தக் கமிட்டி அபேட்சகர் ஏ.வி.பி. குருவ ரெட்டியார் வெற்றி பெற்றிருக்கிறார்.

நல்லூர் தொகுதியில் காங்கிரஸ் அபேட்சகரைவிட சுமார் 5,000 வாக்குகள் அதிகம் பெற்று சுயேச்சை அபேட்சகர் சாமிக்கண்ணு வெற்றி பெற்றிருக்கிறார்.

இராமநாதபுரம் தொகுதியில் காங்கிரஸ் டிக்கெட் தரப்படாததால் சுயேச்சையாக நின்று போட்டியிட்ட அமைச்சர் சேதுபதி, எதிர்த்துப் போட்டியிட்ட கம்யூனிஸ்டு அபேட்சகரைவிட சுமார் 32,000 வாக்குகள் அதிகம் பெற்று வெற்றியடைந்திருக்கிறார்.

திருப்பூர், ஆண்டநல்லூர், மணப்பாறை ஆகிய தொகுதிகளில் காங்கிரஸ் அபேட்சகர்களே வெற்றி பெற்றதாக அறிவிக்கப்பட்டிருக்கிறது.

பாராளுமன்றத் தொகுதியில்

சென்னை வடக்குப் பாராளுமன்றத் தொகுதியில் போட்டியிட்ட காங்கிரஸ் அபேட்சகர் டி. செங்கல்வராயனைவிட சுமார் 10,000 வாக்குகளுக்கு அதிகமாகப் பெற்று சோஷலிஸ்டுக் கட்சி அபேட்சகர் திரு. எஸ். சி. சி. அந்தோணி அவர்கள் வெற்றி பெற்றிருக்கிறார். எஸ். சி. சி. அந்தோணி அவர்களுக்கு 86,139 வாக்குகளும் காங்கிரஸ் அபேட்சகருக்கு 76,141 வாக்குகளும், பி. சோ. கட்சி அபேட்சகர் இராசமன்னாருக்கு 14,555 வாக்குகளும் கிடைத்திருக்கின்றன.

கோவை பாராளுமன்றத் தொகுதியில் காங்கிரஸ், தி. மு. கழக அபேட்சகர்களைவிட அதிக

(4-ம் கலம் பார்க்க)

இஸ்ரேலின் ஐ.நா.விரோதப்போக்கு!

எகிப்தியர் காஜாவில் நுழைவதைத் தடுக்கப் போவதாகக் கொக்கரிப்பு

காஜா எல்லைக்குள் எகிப்தியர் பிரவேசிப்பதைத் தடுக்க, தான் நடவடிக்கை மேற்கொள்ளப் போவதாக இஸ்ரேலிய பிரதமர் பென்குரியன் இஸ்ரேல் பார்லிமெண்டில் கூறினாராம்.

ஆனால் ஐ. நா. உதவிச் செயலாளரோ, 'ஐ. நா. படையிடமிருந்து எகிப்தியர், காஜாவின் நிர்வாகத்தை மேற்கொள்ளுவதை ஐ. நா. தடுக்கப் போவதில்லை என்றும், எகிப்திய நிர்வாகிகள் காஜாவுக்குள் வருவதை ஐ. நா. தாமதம் செய்யாது என்றும் கூறியிருக்கிறார்.

பொறுத்திருந்து பார்ப்போம்!

காஜா பகுதியின் நிர்வாகத்தைத் தாங்களே மேற்கொள்ளுவது என்ற எகிப்தின் தீர்மானம் குறித்து ஐ. நா. வட்டாரங்கள், 'பொறுத்திருந்து பார்ப்போம்' என்ற கொள்கையைக் கடைப்பிடிக்கின்றனவாம்!

முதல் உத்தரவு

காஜா பகுதியின் நிர்வாகத்தை மேற்கொள்ள இராணுவமோ, அல்லது அதிகாரிகளோ செல்லாவிட்டாலும், எகிப்து, பிரதேச நிர்வாகம் பற்றிய முதல் உத்தரவைப் பிறப்பித்துள்ளதாம்!

எகிப்திய நிர்வாகிகளுக்குச் செலுத்தவேண்டிய பாக்கி வரிகளை எல்லாம் உடன்செலுத்தி விடவேண்டும் என்பதே அந்த உத்தரவு.

அமைதி

இதற்கிடையில், காஜா பகுதியில் உள்ள ஐ. நா. படை பிரதேசத்தில் பூரண அமைதியும் ஒழுங்கும் நிலவுவதாகத் தெரிவித்திருக்கிறது.

ஆண்டவன் சன்னதியில் அனைவரும் சமமே!

தெ. ஆ. சர்க்காரின் இன வெறிக்கு மாதா கோவில் பாதிரியார் சூடு

கேப்டவுன், மார்ச் 10—

ஐயோ, போகட்டும்! இந்த அளவாவது—மத விவகாரத்திலாவது—ஆண்டவன் சன்னதியிலாவது அனைவரும் சமம் என்பதை ஒப்புகிறார்களே என்று ஆச்சரியப்படத்தான் வேண்டியுள்ளது.

'கேப்டவுனில் உள்ள தங்கள் தேவாலயத்தில், ஆப்பிரிக்காவில் உள்ள எல்லா இனத்தவரும் அனுமதிக்கப்படுவர்' என்று ஓவன் மரக்கான் என்ற பாதிரியார் கூறியிருக்கிறாராம்.

ஆனால் சட்டம்!

ஆனால் தென்னாப்பிரிக்க சர்க்காரின் சட்டமோ, 'வெள்ளையர்—வெள்ளையரல்லாதார் என்ற பாகுபாடு, மாதாகோவில்கள், பள்ளிகள் முதலிய எல்லா இடங்களிலும் அமுல் செய்யப்படவேண்டும்' என்று கூறப்படுகிறது.

பாராட்ட வேண்டியதுதான்!

ஆகவே, இந்தச் சட்டத்திற்கு எதிராக ஒரு பாதிரியார் தனது கோவிலில் அனைவரையும் சமமாக பாவிப்பேன் என்று கூறியிருப்பது பாராட்டுதலுக்குரியதுதானே!

பணியமாட்டோம்!

மேலும் அந்தப் பாதிரியார் குறிப்பிட்டிருப்பதாவது:—

"நாங்கள் வேலை செய்வது இப்படித்தான் இருக்க வேண்டுமென சர்க்கார் கூறுவதற்கு அதிகாரம் இல்லை; அப்படி அவர்கள் கூறுவதற்கு நாங்கள் பணியமாட்டோம்; கோவில் எல்லா இனத்தவரையும் ஒன்றுபடுத்தும் நோக்கத்தை ஏற்றுக்கொண்டிருப்பதாகும்."

கண்களைத் திறக்கவே மாட்டாராம்!

உண்மையைத் திரும்பியும் பார்க்கமாட்டாராம்

செஞ்சீனா பற்றி டல்லசின் போக்கு

கான்பேர்ரா, மார்ச் 13—

உண்மையான சீன சர்க்கார் எது என்பதை அறிந்து கொள்ள மறுத்து, இனியும், தான் கண்களை மூடிக்கொள்ளப் போவதாகவே அமெரிக்க மந்திரி டல்லஸ் கூறியிருக்கிறாராம்!

'சீட்டோ' கூட்டத்தில் பேசிய அவர், 'பீகிங்கில் உள்ள செஞ்சீனாவை அங்கீகரிப்பதால், அமெரிக்க நலன்கள் வளரமாட்டா' என்றும் கூறினாராம்!

"சீனக்குடியரசையே அங்கீகரிப்பது; சீனமக்கள் குடியரசு என்று 'அழைக்கப்படும்' அரசை அங்கீகரிப்பதில்லை; செஞ்சீனாவை ஐ. நா.-வில் நுழைய விடுவதில்லை" என்ற மூன்று அம்சங்களே, சீனாவைப்பற்றிய அமெரிக்கக் கொள்கையின் அடிப்படை என்றும் அவர் கூறியுள்ளாராம்!

திருத்தம்

11-3-57 (வெளியூர் 12-3-57) 'நம் நாடு' இதழில், கடைசிப் பக்கம் முதல் இரண்டு கலங்களில் 'கழகத் தோழர்களை வெறிகொண்டு தாக்கிய காங்கிரஸ் கூலிகள்' என்ற தலைப்பில் வெளியிடப்பட்ட செய்தியில், தாக்குதலின் விளைவாக தம்பிரான், துரைசாமி, கிலிகிலி, சப்பை, குள்ளன், சடகோபன் ஆகிய தோழர்கள் படுகாயப்பட்டனர் என்று காணப்படுகிறது.

ஆனால் கழகத் தோழர்களைத் தாக்கிய காங்கிரஸ் கூலிகள் கிலிகிலியும் சப்பையும் குள்ளனுமேயாவர்; மற்றவர்களனைவரும் தாக்கப்பட்ட நமது கழகத் தோழர்களாவர்.

தாக்கப்பட்ட தோழர்களில் தம்பிரான் என்பவர் நிலை இன்னும் கவலைக்கிடமானதாகவே இருப்பதாகத் தெரிகிறது. மற்றவர்களும் இன்னும் சிகிச்சை அளிக்கப்பட்டு வருகின்றனர். (ஆ-ர்)

(5-ம் கலத் தொடர்ச்சி)

வாக்குகள் பெற்று கம்யூனிஸ்டு அபேட்சகர் தோழியர் பார்வதி கிருஷ்ணன் வெற்றிபெற்றிருக்கிறார். பாராளு மன்றத்திற்குத் தேர்ந்தெடுக்கப்பட்டவர்களில் இவரே முதல் கம்யூனிஸ்டு அபேட்சகர் ஆவர்.

'மௌன ஊர்வலம்'

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

தஞ்சை மாவட்டக் கிராம அதிகாரிகள் சங்கக் கூட்டம் ஒன்றில், வருகிற 18-ந்தேதியன்று ஒரு மௌன ஊர்வலம் நடத்துவதென முடிவு செய்யப்பட்டிருக்கிறதாம்.

கும்பகோணத்தில் நடைபெற்ற அந்த அதிகாரிகள் சங்க மாநாடு ஒன்றில் மேற்கொள்ளப்பட்ட முடிவிற்கிணங்க, பிப்ரவரி மாதச் சம்பளத்தை வாங்கக் கூடாது என்றும் முடிவு செய்யப்பட்டிருக்கிறதாகத் தெரிகிறது.

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா. நெடுஞ்செழியன் எம்.ஏ., அவர்களால் அழகிரி அச்சகத்தில் அச்சிடப்பெற்று, (24. சூரியநாராயண செட்டித் தெரு, இராயபுரம், சென்னை) வெளியிடப்பெறுகிறது. ஆசிரியர்: இரா. நெடுஞ்செழியன் எம்.ஏ.